## ந.க.எண். அ4/275/08 நாள். 28.01.2008 ஊராட்சி ஒன்றியம், அண்ணாகிராமம்

## ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த, பின்வரும் ஊராட்சிகளில் சிறு சேமிப்பு ஊக்க நிதி 2004–05 திட்டத்தில் கீழ்காணும் வேலைக்கு 19.02.2008–ம் தேதி அன்று மாலை 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் ஊராட்சி ஒன்றியத்தில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றது.

**சிறுசேமிப்பு ஊக்க நிதி (2004–05)**

| வ. எண் | பணியின்பெயர் விவரம் | மதிப்பீடு (ரூ) லட்சத்தில் | டேவணி தொகை ரூ | ஒப்பந்த படிவ கட்டணம் ரூ | விற்பனை வரி ரூ | விற்பனை வரிக்கு மேல்வரி ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1 | கோட்லாம்பாக்கம் ஊராட்சி – கோட்லாம்பாக்கம் தர்கா தெருவில் சிமெண்ட் பாதை அமைத்தல் 620 மீ | 10.40 | 10400 | 6000 | 720 | 75 |
| 2 | கணிசப்பாக்கம் ஊராட்சியில் குறுக்குத் தெருவில் சிமெண்ட் பாதை அமைத்தல் 117 மீ | 2.01 | 2010 | 1500 | 180 | 20 |
| 3 | கணிசப்பாக்கம் ஊராட்சியில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம் பழுது பார்த்தல் | 0.59 | 590 | 600 | 75 | 10 |
| | **கூடுதல்** | **13.00** | **13000** | **8100** | **975** | **105** |

## ஒப்பந்த நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளிகள் 19.02.2008 அன்று அலுவலக கடிகாரத்தின்படி மாலை 3.00 மணிக்குள் ஊராட்சி ஒன்றியத்தில் கிடைக்கப்பெற வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் **வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ)** ஊராட்சி ஒன்றியம், அண்ணாகிராமம் என்ற முகவரிக்கு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் வந்து சேர வேண்டும்.
3. குறிப்பிட்டுள்ள காலக்கெடுவிற்குப் பிறகு வரும் ஒப்பந்த புள்ளிகளை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அஞ்சல் தாமதத்திற்கு இவ்வலுவலகம் பொறுப்பு ஏற்காது.
4. ஒப்பந்தபுள்ளி படிவம் பெற வேலைகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தொகை ஊராட்சி ஒன்றிய கருவூலத்தில் 18.02.2008 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 2.00 மணிக்குள் செலுத்தப்பட வேண்டும்.
5. ஒப்பந்தப்புள்ளி படிவம் 19.02.2008 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை வழங்கப்படும்.
6. ஒப்பந்தப்புள்ளி மேலுறையில் எந்த வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி என்று குறிப்பிடப்பட வேண்டும்.
7. இந்த வேலைகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள டேவணித் தொகையினை அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய கருவூலத்தில் 19.02.2008 ந் தேதி 2.00 மணிக்குள் செலுத்தப்பட வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு டேவணித் தொகை பெறப்படமாட்டாது.

8. ஒப்பந்தப்புள்ளிகள் 19.02.2008 பிற்பகல் 4.00 மணிக்கு வருகை தரும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பிரிக்கப்படும்.
9. டேவணித் தொகை செலுத்தப்பட்ட செலுத்துச் சீட்டு அசல் நகல் ஒப்பந்தபுள்ளி படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். இவ்வூராட்சி ஒன்றிய கருவூலத்தில் செலுத்திய செலுத்துச் சீட்டு மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறு டேவணித்தொகை செலுத்துச் சீட்டு இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
10. டெண்டர் முடிந்த பிறகு கூட வேலை உத்தரவு வழங்காமல் ரத்து செய்யும் அதிகாரம் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)க்கு உண்டு.
11. டெண்டர் முடிந்து, வேலை உத்தரவு வழங்கிய ஒரு வார காலத்திற்குள் குறிப்பிட்ட படிவங்களில் ஒப்பந்தம் செய்து கொடுக்க வேண்டும்.
12. வேலை உத்தரவில் குறிப்பிட்டுள்ள காலத்திற்கு முன் வேலையை செய்து முடிக்க வேண்டும். தவறினால் அபராதம் விதிக்கப்படும் அல்லது வேலை உத்தரவு ரத்து செய்யப்படும், அவசியப்பட்டால் ஒப்பந்ததாரரின் பெயரை அங்கீகரிக்கப்பட்ட பட்டியலிருந்து நீக்கம் செய்யப்படும்.
13. இப்பணிக்கு அரசிடமிருந்து நிதி பெற்ற பின்னரே தொகை வழங்கப்படும்.
14. பணிகள் துவங்கும் முன்பும், பணிகள் நடைபெறும் பொழுதும், முடிவுற்ற நிலையிலும் ஆகிய மூன்று நிலைகளிலும் புகைப்படம் எடுத்து வழங்கிய பின்னரே பட்டியல் வழங்கப்படும்.
15. முன்னதாக டெண்டரில் கலந்து கொண்டு வேலை உத்தரவு வழங்கப்பெற்ற ஒப்பந்ததாரர்கள் இவ்வேலையை / குறிப்பிட்ட காலத்தில் ஆரம்பிக்காமலோ அல்லது ஆரம்பித்து வேலைகள் தொடர்ந்து செய்திட தாமதம் செய்தாலோ (அ) வேலையை குறிப்பிட்ட காலத்தில் முடித்துக்கொடுக்க தவறினாலோ அத்தகைய ஒப்பந்ததாரர்கள் இந்த டெண்டரில் கலந்துக்கொள்ள உரிமை கிடையாது மீறி கலந்துகொண்டால் அதனை தள்ளுபடி செய்யும் அதிகாரம் வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ)க்கு உண்டு.

வட்டார வளர்ச்சி அலுவலர்(வஊ)
அண்ணாகிராமம்.

பெறுநர்: பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், ஊராட்சி ஒன்றியம், அண்ணாகிராமம்

நகல்: திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,கடலூர் பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கடலூர்.
நகல் சட்ட மன்ற உறுப்பினர், நெல்லிக்குப்பம் தொகுதி
நகல்: உதவி செயற்பொறியாளர் (ஊ.வ), கடலூர்.
நகல்: ஒன்றிய குழுத்தலைவர். மேசைக்கு.
நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிஊ), ஊராட்சி ஒன்றியம், அண்ணாகிராமம்.
நகல்: ஒன்றிய பொறியாளர்/ ஒன்றிய மேற்பார்வையாளர் ஊராட்சி ஒன்றியம், அண்ணாகிராமம். } தேவையான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை தயார் நிலையில் வைத்திருக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது.

நகல்: அலுவலக விளம்பர பலகைக்கு

ந.க.எண்.அ4/275/08 — ஊராட்சி ஒன்றியம்
நாள். 28.01.2008 — அண்ணாகிராமம்

# ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர் பதவி மற்றும் முகவரி | : | திரு.சி. கண்ணப்பன், வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) ஊராட்சி ஒன்றியம் , அண்ணாகிராமம் |
| 2. | அ. திட்டத்தின் பெயர் /கொள்முதல்/ செய்யப்படும் பணிகள் சம்பந்தமாக விவரம் | : | சிறு சேமிப்பு ஊக்க நிதி 2004–05 |
| | ஆ. பணி அல்லது கொள்முதல் நடைபெறும் மாவட்டங்களின் பெயர் | : | கடலூர் மாவட்டம் |
| 3 | எந்த இடத்தில் எந்த தேதி வரை என்ன விலைக்கு ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமாக படிவம் கிடைக்கும் என்ற விவரம் | : | அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் 18.02.2008 ஒப்பந்தப் புள்ளி விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள விபரப்படி |
| 4. | செலுத்த வேண்டிய முன் வைப்புத் தொகை விவரம் | : | ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள விவரப்படி |
| 5. | நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும் நேரமும் மற்றும் இடமும் | : | 19.02.2008 மாலை 3.00 மணி (அலுவலக கடிகாரத்தின்படி) ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அண்ணாகிராமம் |
| 6. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள், நேரம் மற்றும் இடம் | : | 19.02.2008 மாலை 4.00 மணி அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் |
| 7. | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பொருத்தமானது என தீர்மானிக்கும் முக்கியமான தகவல் | : | ஒப்பந்ததாரர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பதிவு செய்து இருத்தல் வேண்டும். |
| 8 | பணிகள் மொத்த மதிப்பீடு | : | ரூ.13.00 லட்சம் |

வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ)
அண்ணாகிராமம்

*F:\a4-275-E-Tender-Annagramam.doc*